# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வியாழக்கிழமை 24.10.2024 supeedsam.com supeedsam@gmail.com







# தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு

## கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம்




கிழக்கில் தமிழர்கள் தேசிய இனப்பிரச்சினையையும், தமிழ் தேசியத்தினையும் கருத்தில் கொண்டும் செயற்படும் கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும் என கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்று தமிழர்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கு பலர் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர்கள் சிந்தித்து தமது வாக்குகளை பதிவு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் தேர்தலை இலக்கு வைத்து கள்ள நோட்டு புழக்கம்

### கணபதி பிள்ளை மோகன்



நாடாளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து ஒரு வேட்பாளருக்கு 10 ஆயிரம் ரூபா செலவளித்து வாக்குகளை பெறுவதற்காக இந்த 5 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்களை அச்சடிக்கின்றனர். இவர்கள் கடந்த 8 வருடத்துக்கு முன் அதிகாரத்தில் இருந்தபோது அமெரிக்க டொலர் இங்கிருந்து மாற்றப்பட்டு அது சிங்கபூரில் பிடிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்தை தோற்கடிக்க துடித்தவர்கள் திருடியதாக கூறுவது வேடிக்கை




ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்தை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என்று கூறியவர். தற்போது சங்கைத் திருவிட்டார்கள் என்று கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது. சங்கு என்ன அவரது வீட்டுச் சொத்தா இல்லை அவரது வீட்டுக்குள் இருந்தா திருடிக் கொண்டார்கள் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) வினா எழுப்பினர்.

மட்டக்களப்பிலுள்ள நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ் வினாவை எழுப்பினர்.

அவ் ஊடக சந்திப்பில் மேலும் கருத்துத் தெரிவித்த கோ.கருணாகரம்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய இயங்கங்களைப் பற்றிக் கூட இவர்கள் விமர்சனம் செய்து கொன்டிருக்கின்றார்கள். அண்மையில் முன்னாள் யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை நாங்கள் திருத்த நினைத்தோம். ஆனால் அவர்கள் இன்று சங்கையும் திருடிக்கொண்டு போய் விட்டார்கள் என்ற கருத்துப்படக்கூறியிருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...










# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேலைத்திட்ட மாணவர் தூதுவர் மாநாடு 2024

(நூருல் ஹுதா உமர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேலைத்திட்ட மாணவர் தூதுவர் மாநாடு காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் யூ.எல். அசாருதீன் மற்றும் காரைதீவு பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜீ.ரேவதி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 4 கல்வி வலயங்களை சேர்ந்த மாணவ தூதுவர்கள் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் அவர்களது ஆசிரியர்களும் என் 100 பேர்கள் கலந்து கொண்டனர் அத்தோடு இந்நிகழ்விற்கு பொலிஸ் நிலைய அதிகாரிகள் வலயக் கல்வி, முறைசாரா கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்து தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வளவாளர்களாகவும், ஒருங்கிணைப்பாளர் களாகவும் அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர் செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்,




## ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்தை தோற்கடிக்க....

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்தை எப்படியும் தோற்கடிக்க வேண்டும் என்று கூறியவர் தற்போது சங்கைத் திருடிவிட்டார்கள் என்று கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது. சங்கு என்ன அவரது வீட்டுச் சொத்தா இல்லை அவரது வீட்டுக்குள் இருந்தா திருடிக் கொண்டார்கள்.

இந்த சங்குச் சின்னத்தை தேசியத்திற்கு எதிரான சக்திகள் பயன்படுத்திவிடக் கூடாது என்பதற்காக நாம் அதனைப் பாதுகாத்துள்ளோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த சங்குச் சின்னத்தை தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக மிகவும் பாடுபட்டு இன்று அதனை தமிழர்களின் அடையாளமாக கொண்டு வந்துள்ளோம்.

தற்போது பெரும்பாலான இளைஞர்கள் தேசிய மக்கள் சக்தி மற்றும் பெரும்பான்மைக் கட்சிகள் தொடர்பில் பேசுகின்றார்கள். இவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். கடந்த காலங்களில் நாங்கள் இழந்த உயிர்கள், சொத்து இழப்புகள், அழிக்கப்பட்ட எமது கலை, கலாச்சாரங்கள் இவற்றையெல்லாம் மறந்து செயற்பட முடியாது. எமக்கு அபிவிருத்தி தேவைதான், மாற்றம் ஒன்றும் தேவைதான் அதற்காக நடந்தவையெல்லாம் மறந்துவிட முடியாது.

எமக்கான உரிமையைப் பெற்று, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியை எமது பிரதேசங்களில் நிறுவி எமக்கான அபிவிருத்தியையும், மாற்றத்தையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை இக்கால இளைஞர்களாகிய நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பாராளுமன்றத் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் பலவும் இந்தத் தேர்தல் போர்க்களத்திலே இறங்கியிருக்கின்றார்கள். தொடர்ச்சியான எமது உரிமைப் போராட்டத்தில் ஏமாற்றம், விமர்சனம், துரோகம், காட்டிக்கொடுப்பு என்பன தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் எமது மக்களின் உரிமைகள் பெறப்படாமல் இருக்கின்றன.

கடந்த காலங்களிலே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கின்றார்கள். இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு புதிது அல்லாவிட்டாலும், மிகவும் முக்கியமானது. எமது தேச விடுதலைப் போராட்டமானது மெல்ல மெல்ல நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தருணம் இது.

கால ஓட்டத்திலே தமிழ் மக்களின் சின்னங்கள் மாறுபட்டுக் கொண்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு சின்னம் என்ற ரீதியில் தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு கேட்டு வரும் இந்தக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான காலமிருந்து இன்றுவரை எமது உரிமையைப் பெறுவதற்கு கூட்டமைப்பினுடைய சின்னமாக 2001ம் ஆண்டு சூரியன் சின்னமும், 2004ம் ஆண்டு வீட்டு சின்னமும் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலோடு தமிழர்களின் சின்னமாக, அவர்களின் அடையாளமாக, தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக சங்குச் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எமது தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்ற விடயத்தை வலியுறுத்தி பொதுக் கட்டமைப்பினூடாக ஒரு பொது வேட்பாளரை களமிறக்கியிருந்தது. அப்போது அந்தப் பொதுக்கட்டமைப்பில் பிரதான அங்கமாக விளங்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி இப்போது நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் எமது குத்துவிளக்குச் சின்னத்துக்குப் பதிலாகச் சங்குச் சின்னத்தை எடுத்து மக்கள் மத்தியிலே இன்று கொண்டுவந்திருக்கின்றோம்.

தமிழர்கள் தமிழ்த் தேசியத்தின் பால் ஒற்றுமைப்பட வேண்டும். ஒற்றுமைக்காக இந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு போதும் பின்நிற்பதில்லை.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்புமனுத் தாக்கலின் போது ஏற்பட்ட முரண்பாடுகளைக் கடந்து கூட தமிழ் மக்களின் ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்பதை நாங்களாக வலியுறுத்தியிருந்தோம்.

அந்த அடிப்படையில் ஆகக்குறைந்தது ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடிய திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் இணைந்து கேட்க்கக் கூடிய ஒரு உடன்பாட்டையும் கொண்டு வந்திருந்தோம்.

அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறை மாவட்டத்தில் சங்குச் சின்னத்திலும் நாங்கள் களமிறங்குவதற்கு ஒரு உடன்பாட்டுக்கு வந்து திருகோணமலையில் அந்த உடன்பாடு முற்றுப் பெற்றதன் பின்னர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்திற்கான உடன்பாட்டை மீறி அங்கு அவர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று களமிறங்கி அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை மீண்டும் இல்லாமல் செய்வதற்கும், தங்களின் தேசியப்பட்டியல் வாக்குகள் என்ற சுயநலனுக்காக இப்படியான கீழ்த்தரமான வேலையை செய்திருக்கின்றார்கள்.

## கிழக்கில் தேர்தலை இலக்கு வைத்து கள்ள நோட்டு புழக்கம்.....

எனவே மக்கள் கவனமாக இருங்கள் என மட்டக்களப்பு தமிழர் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவரும், சுயேட்சைக்குழு பசுமாட்டு சின்னத்தின் வேட்பாளருமான க. மோகன் தெரிவித்தார்.

செங்கலடியில் உள்ள அவரது காரியாலத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மேலும் தெரிவித்த அவர்,

கடந்த முறை மக்களால் நிறைய வாக்குகளை பெற்ற அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் இன்று இலஞ்சம், ஊழல், கொலை பட்டியலில் என நீண்டு கொண்டே செல்லுகின்றது. அதேபோல தமிழ் தேசியம் என்று கூறிக்கொண்டு எதற்காக பயணிக்கின்றனர் என்று தெரியாதுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்திலே கிட்டத்தட்ட 26 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளோம். ஊழல் அற்ற நேர்த்தியான அபிவிருத்தி கல்வி சமூகத்தை மேம்படுத்துவது, விவசாயத்தை அபிவிருத்தி செய்தல் என்பன எமது இலக்கு. அதேவேளை எங்களுக்கு நாடாளுமன்றத்தில் வாய்ப்புக்கள் கிடைக்கும் பட்சத்திலே எங்களுக்கு கிடைக்கும் ஊதியங்கள் வருமானங்களை ஏழை மாணவர்களின் கல்விக்கு பகிர்ந்தளிப்போம்.

அதேவேளை யார் ஆட்சி அமைத்தாலும் அந்த அரசாங்கத்துடன் ஆட்சியமைத்து ஒரு ஊழல் அற்ற நேர்த்தியான அபிவிருத்தியை மட்டக்களப்பு மாவட்டத்தில் கொண்டு செல்லவேண்டியது எங்கள் எதிர்பார்ப்பு.

நல்லாட்சி அரசாங்கத்தில் ரணிலுடன் நெருக்காமாக பயணித்தபோது கூட நாங்கள் திராவிடர் அமைப்பின் ஊடாக தேர்தலில் களமிறங்கினோம். தமிழர்களுடைய வாக்குகளை எடுத்து இன்னொருவரை வளர்ப்பதற்கு நாங்கள் தயார் இல்லை. அதேவேளை அனைத்து அரசியல் கட்சிகளும் முன் எச்சரிக்கையாக டம்மி சுயேட்சை குழுக்களை நிறுத்துவது வழமை. அதிகமான சுயேட்சைக் குழுக்கள் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள். தற்செயலாக வேட்பு மனு நிராகரிக்கப்படும் போது ஆயத்தமாக இந்த சுயேட்சைக்குழுக்கள் வேட்பு மனு தாக்கல் செய்கின்றனர். எனவே வாக்குகளை பிரிப்பது தமிழ் தேசிய கட்சிகள் தான் நாங்கள் பிரிக்கவில்லை.

எனவே இந்த மக்களை குறிவைத்து கொடுப்பதற்காக அடிக்கப்பட்ட கள்ள நோட்டுக்களாக இருக்க வேண்டும் என நான் கருதுகின்றேன். மக்கள் கவனமாக 5 ஆயிரம் ரூபா நோட்டை பார்த்து வாங்குங்கள் ஏன் என்றால் அதற்குரிய குற்றவாளிகளாக நீங்கள் இருப்பீர்கள் மிக அவதானம்.

தமிழ் தேசிய கட்சிகளுக்கு வாக்களித்தவர்கள் விரக்தியில் உள்ளனர். ஏன் என்றால் தமிழ் தேசியத்தை நேசித்தவர்கள். இன்று பிரிந்து துண்டு துண்டாக நிற்கின்றனர். அதனால் தமிழ் தேசியத்தை பாதிக்காது அபிவிருத்தி என்ற கட்டமைப்பில் ஒன்று சேர்ந்துள்ளனர். தமிழரசு கட்சிக்குள் சாணக்கியனை தேற்கடிக்க வேண்டும் என ஒரு குழு களமிங்கியுள்ளனர், மறுப்பம் ஜனாவை தோற்கடிக்க வேண்டும் என களமிறங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் மோசடியில் சம்மந்தப்பட்டவர்கள் என்பதுடன் முறையற்ற விதத்தில் பெறப்பட்ட காணிகள் அனைத்தையும் மீளப் பெறுவோம் ஏன் என்றால் தொப்புக்குஞ்சு மடுவில் கையடக்கப்படுத்தியுள்ள காணிகள் அனைத்தும் ஒரு காலத்தில் நாங்கள் மக்களை குடியேற்ற கொண்டு சென்று அது தோல்வியுற்று மாவடிஓடை கிராமம் உருவாக்கப்பட்டது. அது மக்களுடைய காணி அதற்கான பற்றுசீட்டுக்களை வைத்திருக்கின்றனர். அதனை மீளப்பெறவேண்டிய அனைத்து முயற்சிகளை செய்வோம்.

தமிழர்கள் சிங்கள தலைவர்களை நம்பவில்லை. ஆனால் சிங்கள கட்சி தலைவர்கள் தமிழ் தேசிய கட்சிகளுக்கு மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். ஒரு கட்டத்திலே ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து போட்டியிட்ட டயஸ் அழப்பெருமால் தான் தோல்வி உற்ற போது தெரிவித்தார். என்னை இரா.சம்மந்தன் நல்லவர் என்று கூறியிருந்தார். நான் வென்றதாக கருதுகின்றேன் என்றார்.

அதேவேளை ரணிலிடம் 60 கோடி ரூபாவை சாணக்கியன் ஏமாற்றி பெற்ற பின்பு அவர்கள் சொன்ன வார்த்தை 'ஏயா கப்பட்டியா'! என்று இன்று தமிழ் தேசியத்தை சின்னா பின்னமாக்கி கொண்டிருக்கின்றனர். தங்களுடைய அதிகார பதவி வெறிக்காக கட்சிகளை பிளந்து சுக்கு நூறாக்கி தமிழ் தேசியத்தை தெருவிலே விட்டு இருக்கின்றனர். அவர்கள் நினைக்கின்றனர் தமிழ் தேசியம் என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொந்தமானது என்று அது தவறானது.

தமிழ் தேசியத்துக்காக மனைவியை கணவனை, குழந்தைகளை, பெற்றோர்களை இழந்தவர்கள் இன்று தெருவில் நிற்கின்றனர். ஆனால் தமிழ் தேசியத்தை வைத்து இவர்கள் விற்று பிழைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது தான் உண்மையானது. சங்கு உருவானது பற்றிய உண்மையை இன்று இடம்பெறும் பிரச்சார கூட்டத்தில் பகிரங்கப்படுத்துவேன் என்றார்.

## தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் ...

அதேபோன்று தமிழ் தேசியத்தின் அடிப்படையில் செயற்படும் கட்சிகள் தங்களுக்குள் வேறுபாடுகளை மறந்து தமிழ் தேசியத்திற்கான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் விக்னேஸ்வரன் கஜரூபன்,

எதிர்வரும் பொதுத்தேர்தலானது வடகிழக்கு தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் ஒரு சவால்மிக்க தேர்தலாக காணப்படுகின்றது. இன்று வடகிழக்கில் தமிழ் தேசிய கட்சிகள் பலவாக பிளவுபட்டு நிற்கின்றது.

அதேபோன்று பல சுயேட்சைக்குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் குழப்ப நிலையிலிருக்கும் இந்த சூழலில் தமிழ் மக்கள் அணியாக திரண்டு தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் கட்சிகளை ஆதரிக்கவேண்டும்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய அரசியல் மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. இன்று அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் சூழ்நிலையேற்பட்டுள்ளது. இதனை உணர்ந்து இப்பகுதியிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுடன் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஆதரவு என்றும் இருக்கும்.

பாராளுமன்ற தேர்தலையும் ஜனாதிபதி தேர்தலையும் வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் இளைஞர்கள் வேறுபடுத்திபார்க்க வேண்டும். ஜனாதிபதியாக பெரும்பான்மை இனத்தவர் ஒருவரே வரும் சூழ்நிலை இந்த நாட்டில் உள்ளது.

தமிழர்கள் இந்த நாட்டில் ஜனாதிபதியாக வரக்கூடிய சூழல் இருக்காது. இன்று வடகிழக்கில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி என்ற கோசம் எழுந்துள்ளதை காணமுடிகின்றது. தேசிய மக்கள் சக்தியின் வரலாற்றை கற்கவேண்டிய சூழ்நிலையில் நாங்கள் அனைவரும் இருக்கின்றோம்.

பாராளுமன்ற தேர்தலானது எமது இனத்தின் அடையாளத்தினையும் இனத்தின் சுயநிர்ணய உரிமையினையும் பாராளுமன்றத்திற்கு எடுத்துச்செல்லவேண்டும். வடகிழக்கில் உள்ள இளைஞர்கள் தேசிய மக்கள் சக்திக்கு பின்னால் செல்வதை விடுத்து தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளில் உள்ள ஆளுமையானவர்களை தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்புவதற்கானசெயற்றிட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமைகள் வடகிழக்கு இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளமையானது தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு ஆபத்தானது.

பாராளுமன்ற தேர்தல் சிறுபான்மை மக்களின் அரசியல் இருப்பினையும் அவர்களின் அபிலாசைகளை தக்கவைக்கும் ஒரு களமாகவே நோக்கவேண்டியுள்ளது- என்றார்.



# உதயசூரியன் தமிழ் இனத்திற்கு ஒரு அடையாளச் சின்னமாக மாற வேண்டும்

## தமிழர் விடுதலை கூட்டணி கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அருண்தம்பிமுத்து

சூரியன் உதிக்க வேண்டிய தேவை உள்ளது என்று மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். எமது கட்சியானது தமிழ்த் இனத்திற்கு ஒரு அடையாளச் சின்னமாக மாற வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணி கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் திங்கட்சிழமை மாலை நடைபெற்ற, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலை கூட்டணி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.தொடர்ந்து உரையாற்றிய அவர்,

புதிய அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டு அரசியலுடன் பயணிக்கும் போது தான் நமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொடுக்க முடியாத நிலைமைகளும் ஏற்படுவதுண்டு.



அரசாங்கம் சொல்லுவதையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் நிலைமை எமது அரசியல் தலைமைகளுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் உரிமைக்காக குரல் கொடுக்கிறோம் என்று கூறியவர்கள் மக்களின் தேவைகளை புறக்கணித்து வந்துள்ளார்கள். நாங்கள் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்க வேண்டிய காலத்தில், கட்டாயத்தில் இருக்கின்றோம் மக்களை பாதிக்கின்ற விடயங்களை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற வேண்டியவர்களாகவும் அதேவேளை மக்களின் தேவைகள் என்று வரும்போது அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுக்க முடியும்.

அமைச்சர்களால் தான் மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் மாற வேண்டும். இடம்பெற உள்ள இந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது சின்னம் சூரியன் உதிக்க வேண்டிய தேவை உள்ளது என்று மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். தமது கட்சிக்கு மக்கள் ஆதரவு தர வேண்டும் நாங்கள் ஒரு மாற்று சக்தியாக உருவெடுப்பதற்கு எமது கட்சியானது தமிழ்த் தேசிய இனத்திற்கு ஒரு அடையாளச் சின்னமாக மாற வேண்டும் என்றார்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் மரியசெல்வம் ரொபட்டி நிக்சன், டானியல் சத்தியேந்திரா பாக்கியம், தர்சாந்தினி அமலநாதன், விநாயகலிங்கம் கஜநந்தன், ராஜேந்திரப்பிரசாத் வெலிங்ரன், பெனடிக் சிறிபாதம், பிலிப் ஜோன் முருகையா ஆகியோரும் உரையாற்றினர்.

# திருமலை மனையாவெளி பகுதியில் சண்முகம் குகதாசனின் பிரச்சாரப்பணிகள் ஆரம்பம்!






(அ.அச்சுதன்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும், திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான சண்முகம் குகதாசனின் தேர்தல் பிரசாரப்பணிகள் (23) திருகோணமலை மனையாவெளி பகுதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வேட்பாளர்களான காளிராஜா கோகுல்ராஜ், கந்தசாமி ஜீவரூபன் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். திருகோணமலை - மனையாவெளி ஸ்ரீ வல்லபசக்தி அருள் மிகு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைநிகழ்வுகள் இடம் பெற்றன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் க. செல்வராஜா (சுப்ரா) உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலர் குகதாசனால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

பிரசாரப்பணிகளின் போது வேட்பாளர் சண்முகம் குகதாசனிற்கு மக்கள் அமோக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடம் வேட்பாளர் ஜெயசிறில் வேண்டுகோள்

( வி.ரி. சகாதேவராஜா)



அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடம் கன்னி உரையை நிகழ்த்தி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டை நிகழ்த்தி ஆசீர்வாதம் பெற்ற பின்னர் முதல் உரையினை அவரது இல்லத்தில் நிகழ்த்தியிருந்தார்.

உதிரஉறவுகளே என விழித்து அவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறார்

எதிர்வரும் 2024, நவம்பர்,14, ல் இடம்பெறும் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழர் தம் தாய்க்கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வீட்டுச்சின்னத்தில் இல:5இல் நான் வேட்பாளராக போட்டியிடுகிறேன் என்பதை சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அத்தனை தமிழ் கிராமங்களுக்கும் கடந்த காலங்களில் சென்று என்னால் முடிந்த சில வாழ்வாதார உதவிகளை செய்துள்ளேன் செய்தும்வருகின்றேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

குறிப்பாக வெள்ளம் கொரோனா போன்ற அனர்த்த காலங்களில்

எனது சேவையை முழுத் தமிழ் கிராமங்களுக்கும் முடிந்தவரை செய்துள்ளேன்.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான நான் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக பணிபுரிந்த காலத்தில் காரைதீவு பிரதேசசபைக் குட்பட்ட பல அபிவிருத்திப்பணிகளை முன்எடுத்திருந்தமை பற்றி மனச்சாட்சியுள்ள அனைவருக்கும் தெரியும்.

அதனைத்தாண்டி எனது உதிர உறவுகள் வதியும் எமது அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏனைய தமிழ் ஊர்களிலும் போரினால் பாதிக்கப்பட்ட, வறுமையால் பாதிப்புற்ற, அனர்த்தங்களால் நலிவுற்ற, ஏழை குடும்பங்களுக்காக முடிந்த உதவிகளை வழங்கும் ஏழைகளின் தோழனாக உள்ளேன்.

தமிழின உரிமைக்காக உள்ளார்ந்தமாக நடைபெற்ற அத்தனை அகிம்சைரீதியிலான போராட்டங்களிலும் முன்னின்று உளப்பூர்வமாக பங்கேற்று உள்ளேன்.

தமிழ்த்தேசிய அரசியலில் என்றும் தடம்மாறாமல் பயணிக்கும் என்னை எதிர்வரும் (14/11/2024) ல் இடம்பெறும் பொதுத்தேர்தலில் மீண்டும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்தில் ஒரு வெற்றி வேட்பாளராக நிறுத்தப்பட்ட அடியேனை உளமார ஆதரிப்பீர்கள் என்பதில் எனக்கு இம்மியளவும் சந்தேகமில்லை.

எனது சேவை மீண்டும் ஒரு அரசியல் அதிகாரத்துடன் தொடர உங்களின் வாக்குகளை உங்கள் தாய்க் கட்சியாம் இலங்கை தமிழரசுக் கட்சி சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடி இடுவதுடன் எனது விருப்பு இலக்கமான ஐந்து (5) இலக்கத்துக்கு மேலே ஒரு புள்ளடி இட்டும் என்னைத் தெரிவு செய்யுமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன்.

# சங்கு சின்ன வேட்பாளர்களுக்கு பூசை வழிபாட்டுடன் கல்முனையில் வரவேற்பு!




( வி.ரி. சகாதேவராஜா)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றிக்காக கல்முனை புலவிப் பிள்ளையார் ஆலயத்தில் உவெஸ்லியன் 78 - 82 சமூக அமைப்பின் ஏற்பாட்டில் விசேட பூசை வழிபாடு நிகழ்வு (23) புதன்கிழமை இடம்பெற்றது.

அங்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்திலே போட்டியிடுகின்ற வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான சோ. புஷ்பராசா, மற்றும் கி. லிங்கேஸ்வரன. த.துரைசிங்கம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் கல்முனை புத்திஜீவிகள் வெஸ்லியன் 78 - 82 சமூக அமைப்பின் உறுப்பினர்கள், உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பூசை வழிபாடுகளை தொடர்ந்து கல்முனை பிரதான வீதிகளில் உள்ள வியாபார ஸ்தலங்களுக்கு தேர்தல் பரப்புரையினையும் இவர்கள் மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது நூலகத்தில் வாசிப்பு மாத விசேட நிகழ்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

2024 ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொது நூலகம் ஒழுங்கு செய்திருந்த விசேட நிகழ்வு திங்கட்கிழமை (21) வெகு விமர்சையாக நடைபெற்றது.

'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' என்ற தொனிப்பொருளின் நூலகர் ஏ.எச். தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது ஜி.எம்.எம்.எஸ். பாடசாலை மாணவர்கள் விசேடமாக அழைக்கப்பட்டு அவர்களுக்கு நூலக சேவை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இம்மாணவர்களை நூலகத்தில் இலவசமாக சேர்த்துக் கொள்வதற்கான அங்கத்துவம் விண்ணப்பப் படிவங்களும் கையளிக்கப்பட்டன.

இதில் பாசாலை சார்பில் பொறுப்பாசிரியர்கள் உட்பட நூலக உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் – அறுகம்பே பகுதிக்கு செல்ல வேண்டாம்: தங்கள் பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை







(பாறுக் ஷிஹான்)

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு மற்றும் அறுகம் விரிகுடா பகுதிக்கு வருகை தரும் தனது பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் பயண ஆலோசனையை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வழங்கியுள்ளதாக இலங்கை பொலிஸ் இன்று தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ, சறுக்கல் உட்பட்ட பொழுதுபோக்கு செயற்பாடுகள் காரணமாக இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையில் அறுகம் பே மற்றும் பொத்துவில் மிகவும் விருப்பமான விடுமுறை இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

'அவற்றில் அவர்களுக்கு இருந்த ஆர்வத்தின் காரணமாக, ஏராளமான இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் அறுகம் விரிகுடாவிற்கு வருகை தந்துள்ளனர், இதன் விளைவாக அப்பகுதியில் ஒரு கட்டிடத்தையும் ஆக்கிரமித்துள்ளனர்.

இப்பகுதி தற்போது இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் அதிக மக்கள் தொகை கொண்டதாக இருப்பதால், அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து சமீப காலங்களில் எங்களுக்குத் தகவல் கிடைத்தது, என்று அவர் கூறினார்.

பூர்வாங்க நடவடிக்கையாக பொலிஸார் ஏற்கனவே வீதித் தடைகளை அமைத்துள்ளதாகவும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களின் வழமையான சோதனைகளையும் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பொலிஸ், விசேட அதிரடிப்படை (STF), கடற்படை, இராணுவம் மற்றும் அரச புலனாய்வு சேவைகள் (SIS) ஆகியவற்றின் ஈடுபாட்டுடன், அருகம் விரிகுடாவில் தற்போது விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை ஈஜஎ தல்துவ உறுதிப்படுத்தினார்.

இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் விடுமுறைக்காலத்தில் இலங்கைக்கு வருகை தரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அறுகம்பே பகுதியில் உள்ள பிரபல சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக, இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் பயண ஆலோசனையை வழங்கியதை அடுத்து, அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே நடந்து வரும் மோதலால் இஸ்ரேலியர்கள் மீது விரோதம் உள்ளவர்கள் தாக்குதல் நடத்தாமல் இருப்பதற்காகவே, சினகொக் பகுதியில் பொலிஸார் மற்றும் பிரதான வீதிகளில் குகூஊ படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர்

# ஜனாதிபதியின் மாற்றம் பொருட்களின் விலையேற்றமே

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு

(க.கிஷாந்தன்)

நாட்டின் சந்தையில் தற்பொழுது தேங்காய் விலை அதிகரித்துள்ளது. பாக்கின் விலை அதிகரித்துள்ளது. முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு தருவதாக சொன்னார்கள். ஆனால் தற்பொழுது 50 ரூபாய்க்கு அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுவா மாற்றம் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை இலக்காக கொண்டு (23.10.2024) நுவரெலியா - நானுஓயா காந்தி கலாச்சார மண்டபத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் தலைமையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராஜாராம் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இக்கூட்டம் இடம்பெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள், தோட்டத் தலைவர்கள், தலைவிமார்கள், இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஈஸ்டர் குண்டு தாக்குதல் செய்தவர்களை பிடிப்பதாக ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் இன்று வரை அதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அத்தோடு தற்பொழுது சந்தையில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு தருவதாக சொன்னார்கள். ஆனால் தற்பொழுது 50 ரூபாய்க்கு அதிகமான விலையில் முட்டை ஒன்று விற்பனை செய்யப்படுகிறது.

அத்தோடு ஜனாதிபதி கூறியிருந்தார். தன்னிடம் ஊழல் செய்த அரசியல்வாதிகளின் கோப்புகள் அதிகமாக இருப்பதாகவும், அதனை தான் ஆட்சிக்கு வந்த பிறகு வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்று வரை அது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் தற்பொழுது மலையகப் பகுதியில் உள்ள மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தது தவறு என அநேகமானவர்கள் சொல்கிறார்கள். தமிழ் பிரதிநிதித்துவம் கட்டாயம் தேவை அதற்கு நாங்கள் வாக்களிப்போம் என பலரும் தற்பொழுது உணர்ந்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடக்கூடியவர்கள் எவருமே மக்களுக்கு நன்கு பரீட்சியம் ஆனவர்கள் கிடையாது.

ஆகையால் மக்கள் இப்பொழுது தெளிவாக இருக்கிறார்கள். அத்தோடு தேர்தல் மறுசீரமைப்பு வந்தால் உங்களுக்கு தெரியும் நுவரெலியா மாவட்டத்தை பொருத்தவரையில் மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 2 ஆசனங்களை மட்டுமே பெற முடியும். ஆனால் தற்போது இருக்கும் சூழ்நிலையில் குறைந்தபட்சம் ஐந்து ஆசனங்களை யாவது பெற முடியும். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையிலும் இதை ஒழிப்பதற்கு தற்பொழுது அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

அத்தோடு உங்களுக்குத் தெரியும் கோட்டாபய அரசாங்கம் ஒரே நாளில் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியிருந்தது. இதனால் நாட்டின் உற்பத்தி குறைந்து பொருளாதார வீழ்ச்சி அடைந்திருந்தது. அதன் ஒரு நடவடிக்கையாக தான் அவரின் ஆட்சி மாற்றத்திற்கு உள்ளாகி இருந்தது என தெரிவித்தார்.

# விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் பல்வேறு வேலைத்திட்டங்கள்







(ஏறாவூர் நிருபர்- நாஸர்)

விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் பல்வேறு வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் விசேட கலை கலாசார நிகழ்வொன்று விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கிய ஏறாவூர் - ஐயங்கேணி ஹிஸ்புல்லா வித்தியாலயத்தில் இன்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்ஜிஏ. நாஸர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்- முறைசாராக் கல்விப்பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்பிஎம். சித்தீக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

விசேட தேவையுடைய மாணவர் பிரிவின் ஆசிரியர் எம்ஏஎம். சுபுஹான் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விசேட தேவையுடைய மாணவர்களின் ஆற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இங்கு அரகேற்றப்பட்டன.

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் இந்த திட்டத்தை அமுல்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# அனைத்து இன, மத மக்களையும் உள்வாங்கிய மட்டக்களப்பை கட்டியெழுப்புவதே எனது கனவு

## மட்டக்களப்பு தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் பிர்தௌஸ் நளீமி

(ஹஸ்பர் ஏ.எச்)

மட்டக்களப்பில் வாழும் அனைத்து இன, மத, கொள்கை வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் ஒன்றிணைப்பதே தனது பிரதான இலக்கு என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எம்.பி.எம். பிர்தௌஸ் நளீமி தெரிவித்தார்.

காத்தான்குடியில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

'அனைவரையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு (Inclusive Batticaloa)' என்பதே எனது கனவாகும். கடந்த காலங்களில் யுத்தம் மற்றும் வேறு பல காரணங்களால் மக்கள் மத்தியில் பிரிவினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளும் தமது வாக்கு வங்கிக்காக இங்கு வாழும் சமூகங்களை பிரித்து வைப்பதிலேயே குறியாக இருந்துள்ளனர். இதற்காகவே பிரதேசவாதமும் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த வேறுபாடுகளை மறந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் 38 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை வழங்கியுள்ளனர். நாம் வேறுபாடுகளை மறந்து இலங்கையர் என்ற குடையின் கீழ் ஒன்றிணைந்ததன் மூலமே இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது. அதேபோன்றுதான் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும். இதற்கான சரியான தெரிவு இனத்துவ சிந்தனைகளை முன்னிறுத்திய கட்சிகளை விடுத்து, சகல இன மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதேயாகும்.




தமிழ் பிரதிநிதி ஒருவர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கின்ற நிலைமையும், அதேபோல் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நிலைமையும் இந்த மாவட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும். ஓர் ஊரைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அந்த ஊருக்கு மாத்திரமன்றி முழு மாவட்டத்திற்குமே சேவை செய்கின்ற அரசியல் கலாசாரத்தை நாம் தோற்றுவிக்க வேண்டும். அந்தவகையில் நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் வெறுமனே ஓர் ஊருக்காக அல்லது ஓர் இனத்துக்காக மாத்திரமின்றி முழு மாவட்டத்திற்குமான பிரதிநிதியாக செயல்படுவேன் என்றார்.

# 15 வருடங்களாக ஒரே தலைமையின் கீழ் ஒரே கொள்கையுடன் இருப்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே

## வேட்பாளர் சோமநாதன் பிரசாத்!

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் ஆயர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேசியத்தை விட்டுக் கொடுக்காத சுயநிர்ணயத்தை விட்டுக் கொடுக்காத நண்பர்கள் உற்றார் உறவினர் அயலவர்கள் என்று பார்க்காமல் எல்லோருக்கும் பொதுவான. வகையில் அரசியல் தீர்வினைப் பெற்றுத்தரக் கூடியவர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கருத்துக்கு உரித்துடையவர்களாக எங்கள் கட்சி காணப்படவதால் மக்கள் எமக்கு வாக்களிக்க வேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ் காங்கிஸ் கட்சி வன்னி வேட்பாளர் சோமநாதன் பிரசாத் இவ்வாறு தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (22) காலை 11.00 மணியளவில் தனியார் சுற்றுலா விடுதியொன்றில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே வேட்பாளர் சோமநாதன் பிரசாத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

15 வருடங்களாகத் தலைமை மாறாமல் கட்சி மாறாமல் , கொள்கை மாறாமல் , சின்னம் மாறாமல் எந்தவித ஊழல்களுமின்றி மக்களுக்காகச் செயற்பட்டு வருவது அகில இலங்கைத் தமிழ் காங்கிஸ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே

தமிழ் மக்களுக்கு எந்த மாவட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டாலும் முன்னின்று செயற்படுபவர்கள் நாங்கள்தான்.

நாங்கள் மற்ற அரசியல் வியாபாரிகளை போன்றவர்கள் அல்ல. மக்களுக்கு சேவை செய்வதே எங்களது முழு நோக்கமாக உள்ளது. எங்களுடைய கட்சி எந்த ஒரு சலுகைகளுக்காகவும் எப்போதும் விலை போனது கிடையாது. '2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பிறகும் தொடர்ந்து மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்ற ஒரே கட்சி நாங்கள் மாத்திரமே.'

'அற்ப சலுகைகளுக்காக நாங்கள் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை மற்ற அரசியல் வியாபாரிகளைப் போலல்லாமல் மக்களுக்காக உண்மையாக செயற்பட்டு வருகின்றவர்கள் நாங்கள்.



எங்கள் தலைமை அவ்வளவு உறுதியானது எதிரிகளும் கூட நேசிக்கிற ஒரே ஒரு தலைமை எங்களுடைய தலைமை தான். கஜேந்திரகுமார். பொன்னம்பலம் என்றால். அனைவருக்கும் தெரியும்.'

'மக்கள் எதிர் நோக்குகிற இனப் பிரச்சினைகளுக்கு எப்போதும் முன்னின்று குரல் கொடுக்கிறவர்கள் நாங்கள். சட்டவிரோத காணி சுவீகரிப்புகள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பிரச்சினைகள் சிங்கள குடியேற்றங்கள் இதுபோன்று தமிழ் மக்கள் எந்த பிரச்சினையை எதிர்கொண்டாலும். எங்களுடைய கட்சியே முன் நின்று. மக்களுக்காக குரல் கொடுத்து வருகிறது.'

'கடந்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல் வாதிகளுக்கு பெட்டி பெட்டியாக காசு கொடுத்தார்கள். கார் கொடுத்தார்கள். பார் கொடுத்தார்கள். ஆனால் நாங்கள் எந்த அற்ப சலுகைக்கும். இடமளிக்காமல் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்தோம்.' '2024 பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக மன்னார் ஆயர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேசியத்தை விட்டுக் கொடுக்காத சுயநிர்ணயத்தை விட்டுக் கொடுக்காத நண்பர்கள் உற்றார் உறவினர் அயலவர்கள் என்று பார்க்காமல் எல்லோருக்கும் பொதுவான. வகையில் அரசியல் தீர்வினைப் பெற்றுத்தரக் கூடியவர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவர் தனது உரையில் கூறியுள்ளார்.

'கொஞ்சமும் கூச்சமில்லாமல் இதை தங்களுக்கானது என்று சில அரசியல் வியாபாரிகள் கூறுகிறார்கள். 'தொடர்ந்து தோல்விகளையும் அவமானங்களையும் சந்தித்தாலும் மக்களை விட்டு நாங்கள் ஒருபோதும் விலகியதில்லை.'

'நம்பி வாக்களித்த மக்களை மற்ற அரசியல்வாதிகள் கைவிட்ட நிலையில் நாங்கள் மட்டுமே எப்போதும் மக்களின் அருகாமையில் இருக்கிறோம்.'

'இம்முறை எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்து எங்களைப் பாராளுமன்றம் அனுப்புங்கள். எங்களுடன் கைகோருங்கள் நாங்கள் தொடர்ந்து பயணிப்போம். எங்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பின் போது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் துரைராஜா.ஜோன்சன் கட்சியின் மன்னார் மாவட்டச் செயலாளர் அந்தோனி விக்ரர் தற்குரூஸ். மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுவீஸ் தூதரக குழுவினர் மேசிடோ நிறுவனத்தில் சிவில் நிறுவன அமைப்புகளுடன் சந்திப்பு





( வாஸ் கூஞ்ஞ)

'மெசிடோ' என அழைக்கப்படும் சமூக மேம்பாட்டு மன்னார் நிறுவனத்தில் மன்னார் சிவில் நிறுவன பிரதிநிதிகளை சந்திப்பதற்காக சுவீஸ் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார சமாதான அபிவிருத்திக்கான குழுவினர் செவ்வாய் கிழமை (22) விஜயம் செய்து இவர்களை சந்தித்தனர்.

சிவில் அமைப்பு மற்றும் மெசிடோ நிறுவன பிரதிநிதிகளுடன் சில மணி நேரம் இக் குழுவினர் கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தற்பொழுதுள்ள அரசியல் நிலைப்பாடு , பொருளாதாரம் , மன்னார் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன எனவும்,

இங்கு சிவில் மக்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை சுவீஸ் தூதரகக் குழுவினர் உண்ணிப்பாக கேட்டறிந்ததாக இதன் பேச்சாளர் தெரிவித்தார்.

சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு அமைவாக இந்த அரசு வடக்கு கிழக்கு பகுதி மக்களின் பிரச்சனைகளுக்கு ஐநாவின் தீர்மானங்களை எற்று செயற்பட வேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றோம் எனவும் சர்வதேச நியமனங்களுக்கு இணைந்து இலங்கை அரசு பணியாற்ற இருப்தாக தெரிவித்து நிற்கின்றது. அத்துடன் பொறுப்பு கூறல் தொடர்பாக கடந்தகால அரசு காலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவற்றை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அவசியமும் இதன்போது சுட்டிக்காட்டி பாதிப்படைந்தவர்களுக்கு நீதி கடைக்க வேண்டும் எனவும் சிவில் மக்களால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 25000 ரூபாய்!

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை

தீபாவளி பண்ணிடிகையை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 25000 ரூபாய் முற்பணம் நாளை முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முற்பணமாக 25000 ரூபாய் வழங்க வேண்டும் என பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இ.தொ.கா பேச்சுவார்த்தை நடத்தி, பேச்சுவார்த்தையில் கம்பனிகள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து நாளை



முதல் முற்பணமாக 25000 ரூபாய் வழங்கப் படவுள்ளது என செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# சின்னம் சூட்டும் நிகழ்வு







(ஆலையடிவேம்பு நிருபர் வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று ஸ்ரீக இராமகிருஸ்ணா கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வானது பாடசாலையின் அதிபர். ஜே ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலையின் இராமகிருஷ்ணா அரங்கில் (23) காலை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.உதயகுமார் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதியும் பாடாசலையின் பழைய மாணவருமான கௌரவ நீதிபதி த.கருணாகரன்; கலந்து சிறப்பித்தனர்.

; சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர், ஏ.எம்.நௌபர்டீன் மற்றும் ஆலையடிவேம்பு கோட்டக் கல்விப் பணிப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கீ.கமலமோகனதாசன், பிரதி அதிபர்களான மதியழகன் மகேஸ்வரன் சதீஸ்குமார் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், எஸ். அகிலன், பழைய மாணவர் சங்க உறுப்பினர். வி.சுகிர்தகுமார் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் அதிதிகள் மற்றும் மாணவ தலைவர்கள் வரவேற்கப்பட்டதுடன் மாணவ தலைவர்களாக தெரிவு செய்யப்பட்ட 88 மாணவர்களுக்கு கலந்து கொண்ட அதிதிகளினால் சின்னம் சூட்டப்பட்டது.

இதன்போது மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட பேச்சாளர் மேடை (கணிஞீடிதட்) பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

திருக்கோவில் கல்வி வலயமானது க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைகளின் பெறுபேறுகளின் பிரகாரம் தேசிய ரீதியில் 5 ஆவது இடத்தை பிடித்துள்ள நிலையில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலையின் பெறுபேறுகளும் இதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

மேலும் பல்வேறு இணைப்பாடவிதானங்களிலும் இராமகிருஸ்ண தேசிய பாடசாலை மாணவர்கள் மாவட்ட மாகாண தேசிய ரீதியிலும் பல சாதனைகளை நிலைநாட்டி வருவதையும் பலரும் பாரட்டி பேசினர்.

# கிண்ணியாவில் யானையின் அட்டகாசம் வீடு பயன் தரும் மரங்கள் துவம்சம்



(ஹஸ்பர் ஏ.எச்)

யானை மனிதன் மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. யானைகள் மனிதனைத் தாக்காமல் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதையும் தாண்டி யானைகள் தனது கைங்கரியத்தை காட்டிக் கொண்டே வருகின்றது.

திருகோணாமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆயிலியடி வானாறு எனும் பகுதியில் இச் சம்பவம் இரவு நடந்தது.

இவ்வாறு ஊருக்குள் புகுந்த காட்டு யானை வீடு உட்பட தென்னை மாமரம் ,முதலான பயன் தரும் மரங்களை அழித்து துவம்சம் செய்துள்ளன அத்துடன் நெல் முதலான வற்றையும் நாசப்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் யானை தொல்லை காரணமாக பயந்து பயந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எமது வாழ்வாதாரத்தை நாசப்படுத்தி விட்டது. இரவு கரண்ட் இல்லாத சமயத்தில் யானை வந்து எல்லாப் பயிர்களையும் அழித்துவிட்டது தினமும் வந்து நாசப்படுத்துகிறது.

வீடு,மாமரம்,தென்னை மரம் முதலானவற்றை அழித்துள்ளது விதை நெல் மாட்டுத்தீனி முதலானற்றையும் அழித்து வீட்டையும் உடைத்து விட்டது.

இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் யானையை கட்டுப்படுத்தி தர வேண்டும்.

யானை தொல்லையினால் தூங்க முடியவில்லை.

என்னிடம் பல தென்னை மரங்கள் உள்ளன. இதனைப் பாதுகாக்க அரசாங்கம் யானைகளை கட்டுப்படுத்தி தர வேண்டும்.

யானை தொல்லை தாங்க முடியாது நெல்,மாட்டுத் தீனி வீடு,தென்னை மரம் எல்லாவற்றையும் அழித்து விட்டது.

பிள்ளைகளை வைத்துக் கொண்டு பயந்து பயந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். என மக்கள் தெரிவிக்கின்றனர் .